# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 39/நு/2019

நாள் : 20/09/2019

**திரு L. பழனியப்பன்,**
**மேட்டூர் அணை—I,** — **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**மேட்டூர் நகராட்சி,** — **எதிர் மனுதாரர்**
**மேட்டூர்.**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை–I, காவேரி நகர், 17–82 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு L. பழனியப்பன் அவர்களின் மனு 13.03.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 39/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) தாக்கல் செய்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை–I, காவேரி நகர், 17–82 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு L. பழனியப்பன் என்பவர் தான் மேட்டூர் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணியாற்றி 30.06.2003–இல் பணி ஓய்வு பெற்றதாகவும், ஓய்வு பெற்று 15 ஆண்டுகளுக்கு மேலாகியும் தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 10.04.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்திருந்த விவரங்களை உறுதி செய்ததுடன் தனக்கு பின்னால் ஓய்வு பெற்ற திருமதி இராஜலட்சுமி மற்றும் திரு குணசேகரன் ஆகியோருக்கு விதிமுறைகளை மீறி சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் 07.05.2019 நாளிட்ட கடிதம் எண்.747/எப் 1/2016–இல் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதி அலுவலக கணக்கில் ரூ.7834/– இருப்பு இருந்தது என்றும், அத்தொகை 25.05.2004 நாளிட்ட வங்கி காசோலை எண்.594269 மூலம் வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் மேட்டூர் நகராட்சி ஒட்டுமொத்த ஊழியர்களுக்காக வரப்பெற்ற ரூ. 3.65.815/– தொகையினை தனக்கு 24 சதவீதம் வட்டியுடன் வழங்க ஆணையிடக்கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 4587/2016 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினை தாக்கல்செய்ததாகவும் நகராட்சிக்கு வரப்பெற்ற ரூ. 3.65.815/–ஐ ஒட்டுமொத்த ஊழியர்களுக்கான தொகை என்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தெரிவித்த நிலையில், மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய வட்டித் தொகையினை கணக்கிட்டு 15.09.2016 நாளிட்ட தீர்ப்பினை பெற்ற நாளிலிருந்து ஆறு வாரகாலத்திற்குள் வழங்குமாறு ஆணையிட்டதைத் தொடர்ந்து வட்டித் தொகை ரூ. 29.256/– மேட்டூர், பாரத மாநில வங்கியின் 14.02.2017 நாளிட்ட காசோலை மூலம் முறையீட்டு மனுதாரருக்கு நேரிடையாக வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட விவரங்களை 27.06.2019 நாளிட்ட விசாரணையின் போதும் பொறுப்பு ஆணையாளரும் உறுதி செய்தார். முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய சேமநல நிதித் தொகை ரூ.7.834/– மற்றும் அத்தொகைக்கான வட்டித் தொகை ரூ. 29.250/– ஆகியவை, வங்கி காசோலைகள் மூலம் முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்டு விட்ட நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், 20–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

24.9.19

25/9/19

பெறுநர்

1. திரு L. பழனியப்பன்,
17/82, காவேரி நகர்,
(முருகன் கோவில் பின்புறம்)
மேட்டூர் அணை–I,
சேலம் மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர்,சேலம் மாவட்டம்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி